// பாதுகாப்பான முறையில் //

**இராமநாதபுரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ப.மு.எண்.6491 / அ1 / 2025, நாள். .08.2025**

பொருள் – பள்ளிக் கல்வி – தமிழ்நாடு அமைச்சுப் பணி – இராமநாதபுரம் மாவட்டம் – அரசு உயர்நிலைப் பள்ளி, இராமேஸ்வரம் ரோடு – இளநிலை உதவியாளர் செல்வி.அ.ஜாய் டெலிஸல் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 29.09.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை –
1) அரசாணை (நிலை) எண்.151, பள்ளிக் கல்வி (SE1(1)) துறை, நாள்.09.09.2022.
2) அரசுக் கடித எண்.(e file) எண்.4419, தொ.க.1(I) 2021–1, பள்ளிக் கல்வித் துறை, நாள்.17.05.2024.
3) சென்னை–06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (ப.தொ) செயல்முறைகள் ந.க.எண்.026062/ஜே/இ2/2023, நாள்.22.05.2024.
4) இராமநாதபுரம் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.09266/அ1/2023, நாள்.27.09.2023.
5) இராமேஸ்வரம் ரோடு அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியரின் கடித ந.க.எண்.49/2025, நாள்.09.06.2025.

+++++++

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் ரோடு அரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு 29.09.2023 முற்பகல் முதல் பணியேற்றுப் பணிபுரிந்துவரும் செல்வி.அ.ஜாய் டெலிஸல் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கக் கோரும் கருத்துரு பார்வை 5–ல் காணும் கடிதம் வாயிலாக சம்மந்தப்பட்ட தலைமையாசிரியரின் பரிந்துரையுடன் இவ்வலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது.

மேற்காணும் பணியாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் (Group-IV Services (Notification No.07/2022, dated 30.03.2022) தேர்வு செய்யப்பட்டு பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதன் அடிப்படையில் பார்வை 4–ல் காணும் செயல்முறைகளின்படி பணிநியமனம் வழங்கப்பட்டு 29.09.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார். அன்னாரது கல்விச் சான்றுகளின் உண்மைத்தன்மை சம்மந்தப்பட்ட தலைமையாசிரியரால் அறியப்பட்டுள்ளது. எனவே பார்வை 5–ல் காணும் சார்ந்த தலைமையாசிரியரின் பரிந்துரையின் அடிப்படையில் செல்வி.அ.ஜாய் டெலிஸல் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் முதன்முதலில் பணியேற்ற நாளான 29.09.2023 முற்பகல் முதல் பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

1. இப்பணியாளர் பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவார். இவர் தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினையும், தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வினையும் தேர்ச்சி பெற வேண்டும்.
2. இப்பணியாளரது நியமனம் தொடர்பாக நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள/ தொடரப்படும் வழக்குகளின் தீர்ப்பாணைக்கு உட்பட்டு இவ்வாணை வழங்கப்படுகிறது.
3. இப்பணியாளரால் அளிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் ஆவணங்கள் தவறுகள் என பின்னாளில் தெரியவரும் பட்சத்தில் இவ்வாணை எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

மேலும், சார்ந்த பணியாளரது பணிப்பதிவேடு 1 திரள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அதனைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலினை அளிக்குமாறும், இது குறித்து அன்னாரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகளை மேற்கொள்ளுமாறும் சம்மந்தப்பட்ட தலைமையாசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு – அசல் பணிப்பதிவேடு –1 திரள்

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ)
இராமநாதபுரம் 623 503
29/08/2025

பெறுநர் – தொடர்புடையவர் (தலைமை ஆசிரியர் வழியாக)

நகல் – தலைமையாசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, இராமேஸ்வரம் ரோடு